# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். 1. NC 3612/விசாரணை/E/2021 & 2.NC 4297/விசாரணை/E/2021 (SA 9799/E/2021)**

திரு.R.ஆனந்த் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர், சென்னை மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 24.08.2021 மற்றும் 25.08.2025 ஆகிய தேதிகிளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாணையத்தால் 25.08.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் முடிவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலரால் 08.12.2025 அன்று சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 29.12.2025 அன்று *மேல்முறையீட்டாளர் கோரிய கோப்பு* RPT No.3292/06-07 *கிடைக்கப் பெறாதபட்சத்தில், அதற்கு யார் காரணம் என்பதை கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை 03.02.2026 அன்று அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு* இவ்வாணையம் உத்தரவிட்டிருந்தது.

2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஆர்த்தி 06.02.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியரின் 03.02.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் 03.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், RPT No.3292/06-07 என்ற கோப்பின் மீதான நடவடிக்கை 2006-2007 ஆண்டில் தொடங்கப்பட்டு எப்போது முடிவடைந்தது என்ற விபரம் அறிய இயலாத காரணத்தில் அக்கோப்பினை கையாண்ட அலுவலர்கள் மற்றும் கோப்பு முடிவுற்றிருப்பின் அதனை ஒப்படைக்காத அலுவலரின் மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று தெரிவித்துள்ளதை ஏற்று, இவ்வாணையம் பதிவு செய்கிறது.

4. மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய RPT No.3292/06-07 என்ற கோப்பு மீள உருவாக்கப்பட்டு 06.12.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 06.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்கள். 1. NC 3612/விசாரணை/E/2021 & 2.NC 4297/விசாரணை/E/2021 (SA 9799/E/2021)**</u>

பெறுநர்
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்ட அலுவலகம்
மத்திய சென்னை கோட்டம்,
முகப்பேர், சென்னை-40.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர், சென்னை மாவட்டம்.

திரு.R.ஆனந்த்
பழைய எண்.1526-A, புதிய எண்.12
17வது பிரதான சாலை,
அண்ணா நகர் மேற்கு, சென்னை-40.

Copy to: Files NC 3612/E/2021 & 2.NC 4297/E/2021

RJ/PS 7.4